Dalmia Bharat Limited

June 07, 2022 **File No: 1010/1**

BSE Limited
P J Towers, Dalal Street,
Fort Mumbai-400001
Scrip Code: 542216

National Stock Exchange of India Limited
"Exchange Plaza", C-1, Block G
Bandra – Kurla Complex, Bandra (E),
Mumbai – 400 051
Symbol: DALBHARAT

Sub: Newspaper Publication regarding the 9th Annual General Meeting of the Company.

Ref: Regulation 30 of the SEBI (Listing obligations and Disclosure Requirements) Regulations, 2015

Dear Sir/Madam,

Please find enclosed e-copies of publication in the newspaper(s) published on June 07, 2022 in Business Line and Dinamani newspaper(s), with respect to 9th Annual General Meeting of the Company to be held through Video Conferencing/other Audio Video means on Friday, July 01, 2022.

The above information will also be made available on the website of the Company at www.dalmiabharat.com

This is for your information and record.

Thanking you,

Yours faithfully,
For Dalmia Bharat Limited

DALMIA BHARAT LIMITED NEW DELHI

Dr. Sanjeev Gemawat
Group General Counsel &
Company Secretary
Membership No. F3669

Defence Ministry okays buying military gear worth ₹76,390 cr

Move will boost Atmanirbhar initiative by offering business opportunities to the domestic defence industry

OUR BUREAU
New Delhi, June 6

The Defence Acquisition Council (DAC) on Monday gave a nod to the armed forces' separate proposals for the purchase of different equipment worth ₹76,390 crore through indigenous manufacturers.

In a meeting chaired by defence minister Rajnath Singh, the DAC accorded fresh acceptance for procurement of Rough Terrain Fork Lift Trucks (RTFLTs), Bridge Laying Tanks (BLTs), Wheeled Armoured Fighting Vehicles (Wh AFVs) with Anti-Tank Guided Missiles (ATGMs) and Weapon Locating Radars (WLRs) through domestic sources with emphasis on indigenous design and development, said the ministry.

The move, said the defence ministry, will substantially boost the Atmanirbhar initiative of the Centre by offering business opportunities to the Indian defence industry.

Strengthening capabilities

A substantial outlay in the DAC nod for proposals is for the Indian Navy, which has got the go-ahead for procurement of Next Generation Corvettes (NGC), which are comparatively small warships, at an estimated cost of approximately ₹36,000 crore. Eight of these NGCs of about 1,500 to 2,000 tonnes are supposed to be constructed on a new in-house design by the Indian Navy using latest technology of ship building. It will take at least five years to be ready for commissioning and would strengthen the Navy's capabilities and push the government's initiative of SAGAR (Security and Growth for all in the Region).


Defence Minister Rajnath Singh

The ministry noted that "These NGCs will be versatile platforms for a variety of roles, viz. surveillance missions, escort operations, deterrence, Surface Action Group (SAG) operations, search and attack, and coastal defence."

The DAC, the ministry said, also agreed to a proposal for the manufacture of Dornier aircraft and Su-30 MKI aero-engines by the navratna CPSE M/s Hindustan Aeronautics Limited (HAL) with a focus on enhancing indigenisation, particularly of aero-engine materials.

Digital Coast Guard project

The Digital Coast Guard project, which would develop a pan-India secure network for the digitisation of various surface and aviation operations, logistics, finance and HR processes in Coast Guard was also approved.

Sluggish steel demand, poor buyer response drag down iron ore prices by 20 per cent

At 20-25%, NMDC announces one of its steepest price cuts

ABHISHEK LAW
New Delhi, June 6

Sluggish steel demand in the country, a reduction in prices by Indian mills and an increase in stocks – following steep export duty imposition – saw iron ore prices tumble across auctions in Odisha by nearly 20 per cent, while NMDC, the country's largest miner, has reduced prices by nearly 25 per cent over a two-week period.

Sluggish steel demand

The fall in domestic prices happened even as global iron ore prices rose by nearly 6 per cent to $143 per tonne on strong global cues, especially Shanghai's opening up after a withdrawal of stringent Covid-induced restrictions.

According to an official of a steel major, June sales in India are already down from their early May levels. The fall in steel prices in overseas markets and subdued demand in domestic markets weighed on sentiments.

Trade sources say hot rolled coil prices are down to ₹63,000-65,000 per tonne, a fall of nearly ₹2,500 per tonne week-on-week and by around ₹5,000 per tonne, month-on-month.

Cold rolled coil prices are down ₹3,000 per tone w-o-w and ₹5,000-6,000 per tonne m-o-m to ₹72,500-74,000 per tonne.

Requesting anonymity, a steel maker said, that many buyers are reluctant to buy materials under the current uncertain market conditions and lower plant capacity utilisation.

India announced steep tariffs on eight steel items, iron ore, and pellets on May 21, which led to a decline in domestic prices of steel and steel-making raw materials, including iron ore.


NMDC reported a decrease in May month sales of around 2.60-2.70 million tonnes

According to trade sources, domestic iron ore fines offers for the Fe 62 per cent grade fell to ₹3,700-3800 per tonne, down 19 -21 per cent from May 23 price of ₹4,700 per tonne.

At the Odisha auctions, iron ore of Fe 63 per cent grade was being traded at ₹4,100-4,200 per tonne, down 18-19 per cent from the ₹5,100 per tonne it fetched two weeks back.

Effective June 5, NMDC has announced a price cut in lump ore by ₹1,300 per tonne (odd) and in fines by over ₹1,000 per tonne. It is the first price cut in June, and the steepest in recent times (between 20 and 25 per cent over May 25 prices). The price of lump iron ore (65.5%) is at ₹4,400 per tonne, while it is ₹3,310 per tonne for iron fines (64% Fe).

Poor buyer response

Sources say NMDC's production for May was over its April numbers of 3.15 million tonnes, but it reported a 2.60-2.70 million tonnes decrease in sales for the month.

The auction of iron ore by a steel major from its mines in Odisha has failed to generate appropriate buyer interest too, with mills deferring purchase decisions anticipating a further drop in prices.

SteelMint's weekly Odisha iron ore fines index (Fe 62%) fell by ₹2,000 per tonne m-o-m to ₹3,600 per tonne ex-mines.

FinMin releases revenue deficit grant of ₹7,183 cr to 14 States

PRESS TRUST OF INDIA
New Delhi, June 6

The total amount of revenue deficit grants released to the States in 2022-23 stands at ₹21,550.25 crore

The finance ministry on Monday released the third monthly instalment of revenue deficit grant of ₹7,183 crore to 14 States.

The Fifteenth Finance Commission has recommended a total Post Devolution Revenue Deficit Grant of ₹86,201 crore to 14 States for the financial year 2022-23.

This is to be released in 12 equated monthly instalments.

Beneficiary States

The States receiving this grant are Andhra Pradesh, Assam, Himachal Pradesh, Kerala, Manipur, Meghalaya, Mizoram, Nagaland, Punjab, Rajasthan, Sikkim, Tripura, Uttarakhand and West Bengal.

"The Department of Expenditure has on Monday released the third monthly instalment of Post Devolution Revenue Deficit (PDRD) Grant of ₹7,183.42 crore to 14 States," the ministry said in a statement.

Total revenue deficit

With the release of the third instalment for the month of June 2022, the total amount of revenue deficit grants released to the States in 2022-23 stands at ₹21,550.25 crore.

Curriculum revamp proposed to mint 'global-ready' CAs

The new scheme will reduce practical training to 2 years from 3 years earlier

KR SRIVATS
New Delhi, June 6

The CA Institute proposes to overhaul its education and training scheme, seeking to introduce a new scheme to mint "global-ready" professionals with enhanced professional competence to cope with the demands of modern day industry and commerce.

On the anvil is a new scheme — which has received the 'in-principle' approval of the Corporate Affairs Ministry (MCA) and has been exposed for public comments — that seeks to reduce the pre-qualification articleship training period to 2 years from 3 years.

A notable proposed change is that the practical training period will be an examination-free period of 2 years, wherein a student can focus on practical training, sources in the CA Institute said.

Further, after qualification, if someone wishes to apply for a Certificate for Practice, then he/she has to undergo a year of work-experience under a fellow practising chartered accountant, they added.

Practical training

"Under the proposed scheme, the practical training will start only after passing both groups of intermediate examinations, and the student will be eligible to appear for the final examination six months after completion of practical training," sources said.

A student may opt for industrial training (nationally or internationally) for a period of 9 to 12 months in the last leg of practical training, they added.

"The proposed scheme reduces the training period to 2 years from the earlier 3 years. But it is important to also understand the other changes related to the practical training period, which effectively take care of changes in the period, "sources added.

The CA Institute would wait for public comments on the draft scheme, after which the Council of ICAI would consider the same, and the finalised scheme will be sent to the MCA for final approval.

The proposed changes in the curriculum and training system will also take into account the increasing expectations from corporates and stakeholders for transparency and governance.

Tech-enabled learning

The new scheme has been formulated taking into account the best practices of international accountancy bodies, the significant aspects of the National Education Policy, 2020 (NEP, 2020) and the requirements under International Education Standards (IESs) of IFAC, sources added. The previous occasion when the CA education and training scheme was modified was in2017.

Under the new scheme, there will be technology-enabled learning through self-paced online modules, that provide necessary industry orientation. There will also be a mandatory paper on multi-disciplinary case study (with strategic management) at the final level to assess the integrated application of professional knowledge in different subject areas combined with the skills acquired during practical training.

Open book assessment

It is also proposed to follow an open book/restricted open book pattern of assessment at the final level to assess the higher-order skills of aspiring chartered accountants, sources said. In the proposed scheme of education and training, the present three-tier structure, namely, Foundation, Intermediate and Final level, would continue. In addition, there will be four self-paced online modules which a student has to complete and pass separately to be eligible to appear in the final examination.

Thus, in place of 4+8+8 papers at the three levels in the existing scheme, there will be 4+6+6+4 papers in the proposed scheme, i.e., 4, 6, and 6 papers each at the Foundation, Intermediate, and Final levels, respectively, and in addition thereto, 4 self-paced online modules. In effect, the total number of papers, that is, 20, for which a candidate has to qualify would remain the same.

FM reviews progress on 'bad bank' rollout, status of regulatory nods

KR SRIVATS
New Delhi, June 6

On Monday, Finance Minister Nirmala Sitharaman reviewed the progress in setting up the National Asset Reconstruction Company Ltd (NARCL), which is popularly referred to as the "bad bank" as it is intended to take over large value NPA accounts (over ₹500 crore) from the banks.

"The Finance Minister was apprised of the progress achieved and took note of the approvals and permissions received for both #NARCL and #IDRCL from the government and regulators. The Boards of both #NARCL and #IDRCL, including MDs, are in place," said a tweet from Finance Ministry.

Accounts transfer

With the account-wise due diligence nearing completion, the first set of accounts is expected to be transferred during July 2022. The remaining accounts are proposed to be taken over within the third quarter of the current financial year, according to the Finance Ministry.


Union Finance minister Nirmala Sitharaman

It may be recalled that the Union Cabinet had last September approved a government guarantee of ₹30,600 crore for securities and receipts issued by NARCL. NARCL is expected to pay up to 15 per cent of the agreed value for the loans in cash, and the remaining 85 per cent would be government guaranteed receipts. These guarantees can only be invoked by banks on resolution or liquidation of the said assets.

NARCL will take up 100 per cent of provided bad loans from lenders worth ₹2 lakh crore, of which ₹90,000 crore will be transferred in the first phase.

Sitharaman had in her 2021-22 budget speech announced the creation of NARCL, or "bad bank," to resolve large cases of stress. Public sector banks have 51 per cent ownership in NARCL, which was incorporated in August 2021.

Along with NARCL, a debt resolution firm, India Debt Resolution Company Ltd (IDRCL), has now been set up. IDRCL is a service company or an operational entity that will manage assets and bring in market professionals and turnaround experts.

Private lenders own a majority shareholding in IDRCL.

India in talks to increase Russian oil imports from Rosneft

Imports from Russia to displace spot purchases from elsewhere

BLOOMBERG
June 6

India is looking to double down on its Russian oil imports with State-owned refiners eager to take more heavily-discounted supplies from Rosneft PJSC as international players turn down dealings with Moscow over its invasion of Ukraine.

State processors are collectively working on finalising and securing new six-month supply contracts for Russian crude to India, said people with knowledge of the companies' procurement plans. Cargoes are being sought on a delivered basis from Rosneft, with the seller set to handle shipping and insurance matters, they said.

These supply agreements, if concluded, will be separate and on top of shipments that India already buys from Russia via other deals. Details on volumes and pricing are still being negotiated with Indian banks set to fully finance all cargoes, said the people who asked not to be identified as discussions are confidential. Indian refiners will increasingly procuring directly from Russian companies such as Rosneft as top international traders such as Glencore Plc wind up their dealings, they added.

Procurement activities for State and private companies are done independently. Spokespersons at the three largest State-owned companies couldn't immediately comment when contacted on the matter.

Ramping up purchases

Both State and privately-owned refineries in India have been ramping up purchases of Russian crude as sanctions and trade restrictions rolled out by the US, UK and EU have caused most buyers to flee and offer levels to crash. An unprecedented amount of Russian crude was heading to India and China last month as European buyers scrambled for replacements and reached as far as United Arab Emirates for alternatives. The ensuing panic and rerouting of global oil flows have lifted oil by 20 per cent more since late-February when Russia invaded Ukraine.


Refineries in India have been ramping up purchases of Russian crude BLOOMBERG

Refiners in India have been enjoying elevated profits from turning cheap crude into fuels that is sold domestically and also in the export market to customers in Europe and the US. Russian crude forms just part of India's overall basket of crude oil feedstock, alongside other long-term as well as spot purchases from the Middle East and Africa.

The potential ramp-up of Russian crude purchases will likely weigh on India's spot imports, said the people. India has bought more than 40 million barrels of Russian oil between late-February and early-May, which comes to about 20 per cent more than flows for all of 2021, according to *Bloomberg* calculations based on trade data. Russian oil arrivals into India for May were at 740,000 barrels a day, up from 284,000 barrels in April and 34,000 barrels a year earlier, according to data from *Kpler*.

Rising oil imports

Discounted Russian oil has provided some relief to India — which imports more than 85 per cent of its oil — just as inflation skyrockets alongside surging prices of everything from food-to-fuel. The access to cheap crude is already boosting India's oil imports, which grew almost 16 per cent in April from last year.

The share of oil from the Eurasian region, which includes Russia, expanded to 10.6 per cent in April versus 3.3 per cent a year earlier, according to oil ministry data.

Power storage market to see rapid expansion: Fitch report

OUR BUREAU
Chennai, June 6

Power storage demand in India is expected to expand rapidly to stabilise the increasing variability on the power supply side – from rising renewable generation – and the demand side, says a report by Fitch Ratings.

Increasing power generation from renewable energy, which is intermittent, will increase supply-side variability, and a higher proportion of electricity demand from residential, agriculture and commercial consumers will add to the intra-day demand volatility, it said.

Renewable energy coupled with storage solutions can be used to provide round-the-clock power, satisfying the robust industrial demand.

Grid stabilisation is another area that necessitates an increase in energy storage investments, as rising ramp-up requirements during peak hours make it difficult to keep the grid frequency within the band required under India's Electricity Grid Code.

Thus, investments in power storage will be crucial to stabilise increasing power generation.

Hydro storage projects

India's fledgling power storage market is dominated by pumped hydro storage projects. Only 3.3GW of pumped hydro storage projects are operational in India, even after the first project was taken up in 1970, against CEA (Central Electricity Authority) estimates of a potential 96GW of capacity across India.

Slower progress in the past was resulted from a lack of clarity on policies related to payments for storage facilities and social and political issues linked with the acquisition of agricultural and forest lands, and relocation compensation for the affected population, especially for the large hydropower projects.

However, the storage capacity is set to expand at a faster pace due to increased demand, development interest from the private sector and recent tenders. "The pace of development of India's power storage market and the use of storage technologies will depend on factors such as power demand curves, the share of renewables in the generation mix, cost of storage technologies and efforts on demand-side optimisation to reduce peak requirements," says Girish Madan, Fitch Ratings.

In its optimal mix study in 2020, CEA estimated a storage capacity of 10.1 GW of pumped hydro and 27GW battery storage – providing four-hour storage – by 2030.

Fitch Ratings expects most of the investment in storage to come from the private sector, much like renewable generation capacity, where the private sector owns 70 per cent of operating capacity (including large hydro >25MW) and 96 per cent, excluding large hydro. Government-owned entities will act as nodal agencies and intermediate counterparties.

A transparent operating environment is paramount to support the pace of storage investments, especially considering the scale, associated investment costs and long operating life of storage assets, it said.

விளையாட்டுப் போட்டிகளில் சாதனை: தமிழக வீரர்களுக்கு முதல்வர் பாராட்டு

சென்னை, ஜூன் 6: விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த தமிழக வீரர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் தனது ட்விட்டர் பதிவில் திங்கள்கிழமை கூறியிருப்பதாவது: வலு தூக்கும் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாதவன், புதிய ஆசிய சாதனையையும், மற்றொரு வீரர் தனுஷ் தேசிய சாதனையையும் படைத்துள்ளனர். அனைத்து விளையாட்டுகளிலும் தமிழ்நாட்டு வீரர்கள் தொடர்ந்து சாதித்து வருவது கண்டு பெருமிதம் அடைகிறேன். 'ஊக்கமது கைவிடாது மேலும் உயர்க' என்று தனது பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பள்ளிகள் திறந்ததும் முதல் 5 நாள்களுக்கு நல்லொழுக்க வகுப்பு

தஞ்சாவூர், ஜூன் 6: தமிழகத்தில் பள்ளிகள் திறந்ததும் முதல் 5 நாள்களுக்கு நல்லொழுக்க வகுப்புகள் நடத்தப்படும் என்றார் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி.

தஞ்சாவூரில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தது:

தமிழகத்தில் ஜூன் 13-ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படவுள்ளன. முதல் 5 நாள்கள் மாணவர்களுக்கு நல்லொழுக்கத்தைப் போதிக்கும் விதமாக வகுப்புகள் நடத்தப்படும். இதில், தன்னார்வலர்கள், காவல் துறையினர் என பலரும் மாணவர்களுக்குநல்லொழுக்கங்கள் குறித்து பாடம் எடுப்பர். அதன் பிறகு வழக்கம்போல வகுப்புகள் நடைபெறும்.

எஸ்எஸ்எல்சி மற்றும் பிளஸ் 2 துணைத் தேர்வு எழுதாத மாணவர்களுக்கு ஜூலை, செப்டம்பர் என அடுத்தடுத்து தேர்வு நடத்தப்படும். மாணவர்கள் அச்சமின்றி தேர்வை எழுத முன்வர வேண்டும் என்றார் அவர்.

கரோனா சிகிச்சையில் இருப்போர் எண்ணிக்கை 862-ஆக உயர்வு

சென்னை, ஜூன் 6: தமிழகத்தில் தற்போது கரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சையில் இருப்போரின் எண்ணிக்கை 862-ஆக அதிகரித்துள்ளது.

அதேபோன்று திங்கள்கிழமை புதிதாக தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கையும் 90- ஆக உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. அதில் அதிகபட்சமாக சென்னையில் 48 பேருக்கும், செங்கல்பட்டில் 20 பேருக்கும் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. கரோனா தொற்றிலிருந்து மேலும் 64 பேர் விடுபட்டு வீடு திரும்பியுள்ளதன் மூலம் இதுவரை குணமடைந்தோரின் எண்கை 34 லட்சத்து 17,286-ஆக அதிகரித்துள்ளது.

ஆற்றில் மூழ்கி 7 பேர் உயிரிழப்பு: தலைவர்கள் இரங்கல்

சென்னை, ஜூன் 6: கடலூர் கெடிலம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த 7 பேரின் குடும்பத்தினருக்கு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

எடப்பாடி பழனிசாமி (அதிமுக): கடலூர் கெடிலம் ஆற்றில் குளிக்கச் சென்ற 7 பேர் உயிரிழந்த செய்தியறிந்து வேதனை அடைந்தேன். அரசு அறிவித்துள்ள ரூ.5 லட்சம் நிவாரண நிதியை ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும்.

விஜயகாந்த் (தேமுதிக): கெடிலம் ஆற்றில் குளிக்கச் சென்ற 7 பேர் உயிரிழந்த சம்பவம் வேதனையை அளிக்கிறது. நீர்நிலைகளில் மூழ்கி பலர் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. நீர்நிலைகளின் ஆழத்தை உணராமல் குளிப்போரைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கே.பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்): கெடிலம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல். நீர்நிலைகளில் இளைஞர்கள், சிறுவர், சிறுமியர் மூழ்கி பலியாவது தொடர்கதையாக உள்ளது.

ஆற்றில் மணல் எடுக்கப்பட்ட பகுதிகள், நீர்நிலைகளில் ஆய்வு மேற்கொண்டு பாதுகாப்பற்ற பகுதிகளில் எச்சரிக்கை அறிவிப்பு மேற்கொள்ள அரசு உத்தரவிட வேண்டும்.

கே.அண்ணாமலை (பாஜக): கெடிலம் ஆற்றில் மணல் எடுத்ததால் ஏற்பட்ட பள்ளத்தில் தேங்கியிருந்த தண்ணீர் எனத் தெரியாது குளிக்கச் சென்ற 7 பேர் உயிரிழந்த செய்தி வருத்தம் அளிக்கிறது. மணல் எடுத்தவர் யார், உரிமம் பெற்றிருந்தாரா என்பதை அரசு விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலையில் ரசாயனக் கலவை பூசும் பணி தொடக்கம்

கன்னியாகுமரி, ஜூன் 6: கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலையில் ரசாயனக் கலவை பூசும் பணியை தமிழக சுற்றுலாத் துறை அமைச்சர் த. மனோதங்கராஜ் திங்கள்கிழமை தொடக்கிவைத்தார்.

கன்னியாகுமரி கடலில் இரு பாறைகளில் விவேகானந்தர் நினைவு மண்டபமும், 133 அடி உயர திருவள்ளுவர் சிலையும் அமைந்துள்ளன. திருவள்ளுவர் சிலையை 1.1.2000இல் அப்போதைய முதல்வர் மு. கருணாநிதி திறந்துவைத்தார். இந்தச் சிலை உப்புக்காற்றால் சேதமடையாமலிருக்க 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை பாலிசிலிக்கான் என்னும் ரசாயனக் கலவை பூசப்பட்டுவருகிறது.

2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரசாயனக் கலவை பூசப்பட்ட நிலையில், அதற்கான காலக்கெடு முடிந்ததால், புதிய அரசு பதவியேற்றதும் இப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டு, ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதையடுத்து, ரசாயனக் கலவை பூசும் பணியை அமைச்சர் மனோதங்கராஜ் திங்கள்கிழமை தொடக்கிவைத்தார். நிகழ்ச்சியில், ஆட்சியர் மா. அரவிந்த, நாகர்கோவில் மேயர் ஆர். மகேஷ், கன்னியாகுமரி பேரூராட்சித் தலைவர் குமரி ஸ்டீபன், துணைத் தலைவர் ஜெனஸ் மைக்கேல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நவ. 2 வரை படகு சேவை ரத்து

திருவள்ளுவர் சிலையில் ரசாயனக் கலவை பூசும் பணியைத் தொடக்கிவைக்கிறார் அமைச்சர் த. மனோதங்கராஜ்.

படகு சேவை ரத்து: இந்தப் பணி காரணமாக, திங்கள்கிழமை முதல் (ஜூன் 6) நவம்பர் 2ஆம் தேதி வரையிலான 5 மாதங்களுக்கு திருவள்ளுவர் சிலையை படகுகளில் சென்று பார்வையிட சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதியில்லை என, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அறிவித்துள்ளது.

பெண் கருக் கொலையை தடுக்க வேண்டும்: முதல்வருக்கு கே.பாலகிருஷ்ணன் கடிதம்

சென்னை, ஜூன் 6: தமிழகத்தில் பெண் கருக்கொலை அதிகரித்து வருவதையும், கரு முட்டை விற்பனை செய்யப்படுவதையும் தடுக்க வேண்டும் என வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் கே.பாலகிருஷ்ணன் கடிதம் எழுதியுள்ளார்.

கடித விவரம்: தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மாவட்டங்களில் சட்டவிரோதமாக பாலின தேர்வின் அடிப்படையில் பெண் சிசு கருக் கலைப்பு நடந்துள்ளதாகவும், 7 பேர் கொண்ட கும்பல் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. அதேபோல, ஈரோடு மாவட்டத்தில் கருமுட்டை வணிகம் நடந்ததாக செய்திகள் வெளிவந்துள்ளன.

16 வயது சிறுமி கொடுமைப் படுத்தப்பட்டு, நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் கருமுட்டைகள் உருவாக்கப்பட்டு தனியார் மருத்துவமனைகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. இத்தகைய குற்றங்களில் அரசு சார்பில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும், கருமுட்டை வணிகம் பரவலாக நடப்பதாகவே தகவல்கள் வருகின்றன.

ஆகவே, கருவின் பாலினம் அறிவித்தல், பாலினத் தேர்வை தடை செய்தல் சட்டத்தை முழுமையாக தமிழகத்தில் அமல்படுத்த வேண்டும்.

அதை கண்காணிக்க மாநில அளவிலும்,மாவட்ட அளவிலும் கண்காணிப்புக் குழுக்களை புனரமைத்து, அவற்றை முறையாக இயங்க வைக்க வேண்டும்.

பெண் சிசு, கருக் கொலைக்கும், கருமுட்டை விற்பனைக்கும் காரணமாக இருந்த அரசு, தனியார் மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் மருத்துவர்கள்,ஸ்கேன் சென்டர் உரிமையாளர் ஆகியோர் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும்.

புதிய வகை கரோனா பரவல்: தடுப்பூசி பணிகளை அதிகரிக்க நடவடிக்கை

சென்னை, ஜூன் 6: தமிழகத்தில் ஒமைக்ரான் புதிய வகை தொற்றுகள் பரவி வரும் நிலையில், கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் அனைவருக்கும் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

வரும் 12-ஆம் தேதி நடைபெறும் மாபெரும் சிறப்பு கரோனா தடுப்பூசி முகாமில் அதனை செயல்படுத்தவும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

இந்தியாவில் கரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக அதற்கான தடுப்பூசிகள் செலுத்தும் பணி கடந்த 2021-ஆம் ஆண்டு ஜனவரி 16-ஆம் தேதி தொடங்கியது. தற்போது 12 வயதுக்கும் மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்படுகிறது. தமிழகத்தில் அனைவருக்கும் விரைவாக தடுப்பூசி செலுத்த வாரந்தோறும் சனிக்கிழமையன்று மாநிலம் முழுவதும் 50 ஆயிரம் இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வந்தன. அதன்படி, இதுவரை 28 சிறப்பு முகாம்கள் நடைபெற்றுள்ளன.

இந்நிலையில் கரோனா நான்காவது அலை ஜூன் மாதம் வருவதற்கு வாய்ப்புள்ளதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். அதனை உறுதிப்படுத்தும் விதமாக சிங்கப்பூர், மலேசியா, பிரிட்டன், அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும், தில்லி, ஹரியாணா, உத்தரப் பிரதேசம், கேரளம் ஆகிய மாநிலங்களிலும் தொற்று அதிகரித்தது. தமிழகத்திலும் தினசரி தொற்று பாதிப்பு எண்ணிக்கை குறைந்திருந்த நிலையில் படிப்படியாக அதிகரித்து வருகிறது. ஒமைக்ரானில் இருந்து உருவான பிஏ 4 மற்றும் பிஏ 5 புதிய வகை தொற்று தமிழகத்தில் பரவி வருகிறது.

அதனால், மீண்டும் கரோனா தடுப்பூசி முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி, தமிழகம் முழுவதும் ஜூன் 12-இல் 1 லட்சம் இடங்களில் கரோனா சிறப்பு தடுப்பூசி முகாம் நடைபெறவிருக்கிறது.

அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், பள்ளிகள், ஊராட்சி அலுவலகம், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள் என பொதுமக்கள் கூடும் அனைத்து இடங்களிலும் முகாம்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

முதல் தவணை தடுப்பூசி செலுத்தாத சுமார் 30 லட்சம் பேருக்கும், குறிப்பிட்ட காலத்தில் இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத 1.50 கோடி பேருக்கும் மற்றும் இரண்டு தவணை தடுப்பூசி செலுத்தி 9 மாதம் நிறைவடைந்தும் ஊக்கத்தவணை செலுத்திக் கொள்ளாத 60 வயதை கடந்தவர்கள் என மொத்தம் 2 கோடிக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதிகள் இருவர் பதவியேற்பு

சென்னை, ஜூன் 6: சென்னை உயர்நீதிமன்றத்துக்கு கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ள சுந்தர்மோகன், கே.குமரேஷ் பாபு ஆகியோர் திங்கள்கிழமை பதவியேற்றுக் கொண்டனர்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள காலியிடங்களை நிரப்பும் வகையில், வழக்குரைஞர்களாக இருந்த என்.மாலா, சுந்தர்மோகன், கே.குமரேஷ் பாபு, எஸ். சௌந்தர், அப்துல் ஹமீத், ஆர். ஜான் சத்யன் ஆகியோர் நீதிபதிகளாக நியமிக்க உச்சநீதிமன்ற கொலீஜியம் கடந்த பிப்ரவரி 16-ஆம் தேதி பரிந்துரைத்தது.

முதல்கட்டமாக என்.மாலா, எஸ். சௌந்தர் ஆகியோரை கூடுதல் நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து, சுந்தர்மோகன், கே.குமரேஷ் பாபு ஆகியோரை கூடுதல் நீதிபதிகளாக நியமித்து குடியரசு தலைவர் உத்தரவிட்டார். சுந்தர்மோகன், கே.குமரேஷ் பாபு இருவரும் கூடுதல் நீதிபதிகளாக திங்கள்கிழமை பதவியேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத் பண்டாரி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

ஆன்லைன் சூதாட்டம்: பட்டதாரி பெண் தற்கொலை

பவானி

திருவொற்றியூர், ஜூன் 6: சென்னை மணலி புதுநகரில், ஆன்லைன் சூதாட்டத்தில் ஈடுபட்டு ரூ.10 லட்சத்தை இழந்த பட்டதாரி பெண் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

மணலி புதுநகரைச் சேர்ந்த பாக்கியராஜ் என்பவரின் மனைவி பவானி (30). பி.எஸ்சி. பட்டதாரியான இவர், சோழிங்கநல்லூர் அருகே தனியார் நிறுவன அலுவலகம் ஒன்றில் வேலை செய்து வந்தார். இத்தம்பதியருக்கு 2 மகன்கள் உள்ளனர். பவானி கடந்த ஓராண்டுக்கும் மேலாக ஆன்லைனில் ரம்மி என்ற சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்.

அவ்வப்போது பணம் சம்பாதிப்பதும், இழப்பதுமாக இருந்த பவானியை, அவரது கணவர், பெற்றோர் பலமுறை எச்சரித்து வந்துள்ளனர். ஒரு கட்டத்தில் பவானி தனது 20 பவுன் நகையை அடகு வைத்து கிடைத்த பணத்தை சூதாட்டத்தில் இழந்துள்ளார். தனது சகோதரிகளிடம் ரூ.2 லட்சம் வரை கடன் வாங்கி அதனையும் சூதாட்டத்தில் இழந்ததாகக் கூறப்படுகிறது. மொத்தம் ரூ.10 லட்சத்துக்கும் மேலான தொகையை ஆன்லைன் சூதாட்டத்தில் இழந்தது குறித்து பவானி தனது கணவர், உறவினர்களிடம் அழுது புலம்பியதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை இரவு குளித்துவிட்டு வருவதாகச் சென்ற பவானி வெகு நேரமாகியும் திரும்பி வராததால் சந்தேகமடைந்த கணவர் பாக்கியராஜ் குளியலறைக்குச் சென்று பவானியை அழைத்தார். உள்புறமாக தாழிட்ட நிலையில் குளியலறையிலிருந்து எவ்வித பதிலும் இல்லாததையடுத்து பாக்கியராஜ் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது பவானி தூக்கில் தொங்கியபடி காணப்பட்டார்.

உடனடியாக அவரை மீட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் பவானி ஏற்கெனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். பவானியின் சடலம் திங்கள்கிழமை பிரேத பரிசோதனைக்குப் பிறகு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதுகுறித்து மணலி புதுநகர் காவல் நிலைய போலீஸார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்? எடப்பாடி பழனிசாமி, அன்புமணி கேள்வி

சென்னை, ஜூன் 6: ஆன்லைன் சூதாட்டங்களைத் தடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று எதிர்க்கட்சித் தலைவரும் அதிமுக இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி, பாமக தலைவர் அன்புமணி ஆகியோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எடப்பாடி பழனிசாமி: சென்னையில் ஆன்லைன் ரம்மி விளையாட்டால் இளம்பெண் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ள நிலையில், ஆன்லைன் ரம்மி விளையாட்டுக்குப் பத்திரிகைகளில் விளம்பரமும் வந்துள்ளது. காவல்துறை டிஜிபியே ஆன்லைன் ரம்மி அல்ல, அது ஆன்லைன் மோசடி, உங்கள் உயிரைக் கொல்லலாம் என வெளிப்படையாக எச்சரிக்கும் நிலையிலும்கூட, இந்த உயிர்க்கொல்லி ஆன்லைன் சூதாட்டங்களைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்? யாருடைய அழுத்தத்தால் இந்தத் தயக்கம்? இன்னும் எத்தனை உயிர்களை தெரிந்தே கொல்லப் போகிறது இந்த ஆன்லைன் சூதாட்டம்?

அன்புமணி: ஆன்லைன் சூதாட்டத்துக்கு அடிமையாவோரின் எண்ணிக்கையும், அதனால் நிகழும் தற்கொலைகளும் அதிகரித்து வரும் நிலையில், இந்த விஷயத்தில் தமிழக அரசு உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்ளாதது ஏமாற்றமளிக்கிறது. ஆன்லைன் சூதாட்டம் மற்றும் அதனால் நிகழும் தற்கொலைகளைத் தடுக்க புதிய தடைச் சட்டம், மேல்முறையீடு என்ற இரண்டில் எந்த ஆயுதத்தை எடுக்கப் போகிறது என்பதை அரசு விளக்க வேண்டும். மேல்முறையீடுதான் அரசின் விருப்பம் என்றால், அதன் பாதகங்களை உணர்ந்து, அதற்கு பதிலாக ஆன்லைன் சூதாட்டத் தடைக்கு அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டும்.

ராஜீவ் கொலை வழக்கு கைதி முருகனுக்கு பரோல் கோரிய மனு வாபஸ்

சென்னை, ஜூன் 6: முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு தண்டனைக் கைதி முருகனுக்கு பரோல் கோரிய மனு தொடர்பாக சிறைத் துறை டிஐஜியிடம் மேல்முறையீடு செய்ய உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியதையடுத்து, அந்த மனுவை அவரது மனைவி நளினி வாபஸ் பெற்றார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதியாக உள்ள நளினி சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் தனக்கு தமிழக அரசு பரோல் வழங்கி உள்ளது. இதே வழக்கில் வேலூர் சிறையில் உள்ள தனது கணவர் முருகனுக்கு பரோல் வழங்கப்படவில்லை. 31 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவிக்கும் தங்களை தமிழக அரசின் விடுதலை தீர்மானத்தின்படி இன்னும் விடுதலை செய்யவில்லை. மருத்துவ காரணங்களுக்காக முருகனை 6 நாள்கள் பரோலில் செல்ல அனுமதிக்கக் கோரி, மே 26-ஆம் தேதி நானும், மே 21-ஆம் தேதி எனது தாய் பத்மாவும் தமிழக அரசிடம் மனு அளித்தோம். அந்த மனு இதுவரை பரிசீலிக்கப்படவில்லை. எனவே, முருகனை 6 நாள்கள் பரோலில் செல்ல அனுமதிக்கும்படி தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் குறிப்பிட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் வைத்தியநாதன், ஜெகதீஷ் சந்திரா அமர்வு முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. முருகன் சிறையில் இருந்தபோது குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டதால் அவருக்கு பரோல் கோரிய மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. அதை எதிர்த்து சிறைத் துறை டிஐஜி-யிடம் மேல்முறையீடு செய்யலாம் என சிறைத் துறை தரப்பில் ஆஜரான அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் ஹசன் முகமது ஜின்னா தெரிவித்தார்.

இதையடுத்து, முருகன் பரோல் தொடர்பாக சிறைத் துறை டிஐஜி-யிடம் மேல்முறையீடு செய்யும்படி நீதிபதிகள் அறிவுறுத்தியதையடுத்து, பரோல் மனுவை வாபஸ் பெறுவதற்கு நளினி தரப்பில் அனுமதி கோரப்பட்டது. இதை ஏற்ற நீதிபதிகள், முருகனுக்கு பரோல் கோரிய மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

நளினி, ரவிச்சந்திரன் விடுதலை வழக்கு: தேதி குறிப்பிடப்படாமல் தீர்ப்பு ஒத்திவைப்பு

சென்னை, ஜூன் 6: தமிழக அமைச்சரவை தீர்மானத்தின்படி, தங்களை விடுதலை செய்யக் கோரி, ராஜீவ் கொலை வழக்கு கைதிகளான நளினி, ரவிச்சந்திரன் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடப்படாமல் சென்னை உயர்நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதிகளாக உள்ள நளினி, முருகன் உள்பட ஏழு பேரையும் விடுதலை செய்ய கடந்த 2018-ஆம் ஆண்டு செப்டம்பர் 9-ஆம் தேதி தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது.

இந்த தீர்மானத்தின் மீது ஆளுநர் தாமதிப்பதால், அவரது ஒப்புதலுக்கு காத்திருக்காமல் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி, ரவிச்சந்திரன் சார்பில் தனித்தனியாக வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு கடந்த முறை வழக்கு விசாரணைக்கு வந்தபோது, நளினி தடா சட்டப் பிரிவில் தண்டிக்கப்பட்டாரா என்பதை தெரிந்து கொள்வதற்காக சிறப்பு நீதிமன்றத்தின் அசல் தீர்ப்பை சமர்ப்பிக்க தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், இந்த வழக்கு தலைமை நீதிபதி முனீஸ்வர் நாத் பண்டாரி மற்றும் நீதிபதி மாலா அமர்வில் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு நீதிபதிகள் முன் சமர்ப்பிக்கப்பட்டது.

நளினி தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ராதாகிருஷ்ணன் அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் ஆளுநர் முடிவு எடுக்காமல் இருந்ததும், இரண்டரை ஆண்டுகளுக்குப் பின் அமைச்சரவை பரிந்துரையை குடியரசுத் தலைவருக்கு அனுப்பியதும் அரசியல் சாசனத்துக்கு விரோதமானது. அரசியல் சாசனத்துக்கு விரோதமாக ஆளுநர் செயல்பட்டிருந்தால் உயர்நீதிமன்றம் அதை சட்டவிரோதம் என அறிவிக்கலாம்.

இரண்டரை ஆண்டு கள் அமைச்சரவை பரிந்துரை மீது எந்த முடிவும் தெரிவிக்காமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியதால் இந்த விவகாரத்தை மீண்டும் ஆளுநருக்கு அனுப்பி வைக்க கூடாது எனவும் குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி முனீஸ்வர் நாத் பண்டாரி உச்சநீதிமன்றம் போன்று, விடுதலை செய்வது தொடர்பாக உயர் நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது. அதற்கு உச்சநீதிமன்றத்தை தான் நாட வேண்டும் என குறிப்பிட்டார். வழக்குரைஞர் ராதாகிருஷ்ணன் வாதிடுகையில், நளினியை விடுதலை செய்யக் கோரவில்லை எனவும், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி ஆளுநரின் ஒப்புதலுக்கு காத்திருக்காமல் விடுதலை செய்யும்படி தமிழக அரசுக்கு உத்தரவிட தான் கோருவதாக தெரிவித்தார்.

தீர்ப்பு ஒத்திவைப்பு: தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்குரைஞர் சண்முகசுந்தரம், நளினிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ளது.

ஏழு பேரையும் விடுதலை செய்ய 2018-இல் அமைச்சரவை ஆளுநருக்கு பரிந்துரைத்துள்ளது.

ஆளுநரின் அதிகாரத்தை உச்சநீதிமன்றம் விளக்கியுள்ளதாக கூறிய அவர், விடுதலை செய்வது தொடர்பாக ஆளுநரின் கையெழுத்து அவசியம் என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளதாகவும், இந்த வழக்கில் உயர் நீதிமன்றமே பரிசீலிக்கலாம் என்றார். அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்ததை அடுத்து, நளினி, ரவிச்சந்திரன் வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.